

(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 101.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 ஒக்டோபர் 23, புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர்

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ வஜிர அபேவர்தன, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அகில விராஜ் காரியவசம், கல்வி அமைச்சர்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ மனோ கணேசன், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

கௌரவ பழனி திகாம்பரம், மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா, புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ றிஸாட் பதியுதீன், கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ மங்கள சமரவீர, நிதி அமைச்சர்

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன, சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

கௌரவ ரஊப் ஹகீம், நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

கௌரவ அப்துல் ஹலீம், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கபீர் ஹஷீம், நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பி. ஹரிசன், கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ருவன் விஜேவர்தன, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்

கௌரவ ரவீந்திர சமரவீர, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

கௌரவ சுஜீவ சேனசிங்க, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த அலுவிஹாரே, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ பைஸால் காசிம், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஏ. டி. பிரேமதாச, மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா, ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த சேணாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ நலின் பண்டார ஜயமஹ, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ அப்துல்லா மஹரூப், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சர்

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ சிசிர குமார அபேசேகர

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ லஸந்த அலகியவன்ன

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சார்ல்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ சாந்த பண்டார

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ பைஸர் முஸ்தபா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹ்மான்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுர விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன

கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ டீ. பி. ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. **சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்வரும் செய்தி பிரதிச் சபாநாயகரால் வாசிக்கப்பட்டது:—



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2019 ஒக்தோபர் மாதம் 18 ஆந் திகதி

மாண்புமிகு கரு ஜயசூரிய அவர்கள்
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்படுகின்றது.

அதற்கமைய மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) அம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - விசுவாசமுள்ள

மைத்திரிபால சிறிசேன

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

2. சபாநாயகரின் அறிவித்தல்கள்: பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்களை விடுதார்,—

I

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திரசிறி கஜதீர அவர்கள் காலமானதால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 127(3) இன் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலங்க சுமதிபால அவர்களை அக் குழுவில் சேவையாற்றுவதற்கு 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

II

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 127(3) இன் ஏற்பாடுகளுக்கு அமைய 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ சந்திம கமகே அவர்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அவர்கள் அக்குழுவில் சேவையாற்றுவதற்கு பெயர் குறிப்பிட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

III

"இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113(2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்களைச் சபாநாயகர் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன் :-

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ கருணாரத்ன பரணவிதான

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ வேலு குமார்

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன."

IV

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. சிறீதரன் அவர்களின் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2013 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVIII ஆம் பகுதியையும்;

(ii) 2015 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XIII ஆம் பகுதியையும்;

(iii) 2016 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும், ஒன்பதாவது தொகுதியின் XII, XIII மற்றும் XIV ஆம் பகுதிகளையும்;

(iv) 2017 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXI மற்றும் XXII ஆம்

பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் IX ஆம் பகுதியையும், ஒன்பதாவது தொகுதியின் VII, VIII, IX மற்றும் X பகுதிகளையும்; மற்றும்

(v) 2018 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் I மற்றும் II ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் I மற்றும் II ஆம் பகுதிகளையும், ஒன்பதாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் பத்தாவது தொகுதியின் X பகுதியையும்சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும் ஆண்டுக் கணக்குகளையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு, பிராந்திய அபிவிருத்தி பிரிவு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைதேசியப் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொட்டுஅத்தாவல சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2007/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொடிகஹகந்த சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2039/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iv) (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் காயன்கேணி கடலோர சரணாலயம் தொடர்பில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2118/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் கட்டளைகள் வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நிதி அமைச்சர், கணக்கு வாக்குப் பணம் - 2020, முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அட்டவணைகளைச் சமர்ப்பித்ததார்.

மேற்படி அட்டவணைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(10) நிதி அமைச்சர், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வை விலக்களிப்புக்கள் தொடர்பல் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதிய 2143/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2008 யூன் 10 ஆம் திகதிய 1553/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகளை மீள் பரிசீலனை செய்து திருத்தியமைத்து அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரினால் 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2135/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகளைச் சமர்ப்பித்து அக்கொள்கை மற்றும் உத்திகள் வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான சீதுவ விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் வாணிப அலுவல்கள் நீண்டகாலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(16) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(17) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2017 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான விவசாயத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(18) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள்;

(ii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(த இ) மற்றும் 61(1)(தஈ) பிரிவின் கீழ் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களை பேணிக்காத்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iv) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் பிரிவு 29 மற்றும் பிரிவு 61(1)(ப) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் தம்புவா மீன் இனங்களைப் பிடிப்பதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2014/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(v) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) பிரிவின் கீழ் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவம் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 15 ஆம் திகதிய 2023/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(vi) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ஐ) மற்றும் 61(1)(ந) பிரிவின் கீழ் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தலையிடுவதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகளை அமுலாக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(vii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்கள் தரையிறக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(viii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 64 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61(1)(ஆ) பிரிவின் கீழ் மாதல் மீன்பிடி (கரைவலை) தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 05 ஆம் திகதிய 2065/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

(ix) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ந) பிரிவின் கீழ் வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(x) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடு தொடர்பில் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 18 ஆம் திகதிய 2115/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(19) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(20) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுச்சக்தி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(21) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(22) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான வளிமண்டலவியல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(23) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(24) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான மத்திய கலாசார நிதியத்தின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(25) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(26) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(27) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, நீதிமன்ற நிருவாகக் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம், உயர்நீதிமன்றப் பதிவாளர் திணைக்களம், சட்ட ஆணைக்குழுத் திணைக்களம், நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் மற்றும் கடன் இணக்க சபைத் திணைக்களம் என்பனவற்றின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில்

குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(28) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(ii) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/85 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iii) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/86 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் ஒழுங்குவிதிகள், இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(29) அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்—

(i) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 26 ஆம் திகதிய 2142/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மற்றும் கட்டளை, பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(30) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: (1) 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் பற்றி ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழுவின் தவிசாளரான, பிரதிச் சபாநாயகர் கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) குழுக்களின் பிரதித் தவிசாளர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் முதலாவது அறிக்கையை (2019 ஒக்டோபர்) சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையை (2018.03.01– 2018.10.26) சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ பிமல் ரத்னாயக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) நிதி சட்டமூலம்;

(ii) சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம்;

(iii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம்;

(iv) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம்;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகள்;

(vi) (அத்தியாயம் 52) மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழான விதிகள்;

(vii) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளை;

(viii) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ix) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) பேராதெனிய, ஹேன்தெனிய, இல. 141/பீ யில் வதியும் திரு. கே.எம்.எம். எச். குலசேகரவினது 2019.06.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்கி ஜயவர்தன சமர்ப்பித்தார்.

(2) ஹெட்டிப்பொல, நீதிமன்றத்துக்கு பின்னால் என்ற முகவரியில் வதியும் திரு. ஏ.கே. நிசாந்த பத்மசிரியினது 2019.08.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஏ.டி. பிரேமதாஸ சமர்ப்பித்தார்.

(3) மாத்தளை, நாஉல, அரங்கல, இல. 300 இல் வதியும் திரு. ஏ.எம்.ஏ.ஜி. நிமல் கருணாதிலகவினது 2019.08.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வஸந்த அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

(4) தெவனகல, கரகம்பிடிகொட, கெத்தாராம விகாரை எனும் முகவரியில் வதியும் வண. கொக்நகர ரதனசார தேரரினது 2019.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜே.சீ. அலவத்துவல சமர்ப்பித்தார்.

(5) **(i)** கொபைகனே, மொரகொல்ல எனும் முகவரியில் வதியும் செல்வி எச்.எச். லக்சிகா மதுவந்தி விக்கிரமசிங்கவினது 2019.08.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை, இல. 117 ஏ/3/1 இல் வதியும் திரு. லலத் ஹேமா ஒமரசிரி அபேகுணவர்தனவினது 2019.09.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பத்தரமுல்ல, கொஸ்வத்த, கடுவல வீதி, இல. 352/34 ஏ இல் வதியும் திரு. துசான் சியாமிந்த அந்தோனி பர்னாந்துவினது 2019.09.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே சமர்ப்பித்தார்.

(6) **(i)** சிலாபம், வைக்குளம், சில்வன் தோட்டம், இல. 28 இல் வதியும் திரு. ஜயந்த பியதிகமவினது 2019.07.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பன்னிபிட்டிய, மாகும்புர, குலதுங்க மாவத்தை, இல. 449 இல் வதியும் திரு. என்.என்.எஸ். சமரகோனினது 2019.08.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

6. தேசிய புத்தாக்க முகவராண்மை: பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— தேசிய புத்தாக்க முகவராண்மையைத் தாபிப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 நவம்பர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும், அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

7. ஈடு (திருத்தம்): நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (89 ஆம் அத்தியாயமான) ஈடுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 நவம்பர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும், அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

8. நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தம்): நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 நவம்பர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும், அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

9. **உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தம்)** : நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 நவம்பர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும், அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

10. **பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் :** நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் பதிவு அதிகாரசபையைத் தாபிப்பதன் மூலம் அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்கான நிறுவனரீதியிலான கட்டுக்கோப்புக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் எடுத்துக் கூறுவதற்கும்; கடனாளிகளினது அசைவுள்ள ஆதனத்திற்கு மல்லுக்கட்டும் பிணைப்பொறுப்புரிமைகளைக் கொண்டுள்ள அக்கடன் கொடுநர்களுக்கிடையே முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகளுக்கான திறத்தவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக்கூறுவதற்கும்; அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பு உரிமைகள் பதிவகமொன்றைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 நவம்பர் 07 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

11. **பாராளுமன்ற அமர்வுகள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் மற்றும் 21 ஆம் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12. **பாராளுமன்ற அமர்வுகள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 நவெம்பர் 07 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13. **இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 2019 மார்ச் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணையின் மூலம் நியமிக்கப்பட்ட இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு, தனது இறுதி அறிக்கையினைப் சமர்ப்பிப்பதற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2020 மார்ச் 07 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்வதற்கு இந்தப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்: நிதி அமைச்சர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2020 சனவரி 01 ஆம் திகதியன்று தொடங்குகின்றதும், 2020 ஆம் நிதியாண்டுக்கான சேவைகளுக்காக ஏற்பாடு செய்கின்ற ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதும் அல்லது 2020 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று முடிவடைகின்றதும், இவற்றுள் எத்திகதி முதலில் நிகழ்கின்றதோ அத்திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது —

(அ) எழுநூற்றி ஐம்பத்தேழு பில்லியன் அறுநூற்றி எண்பத்து மூன்று மில்லியன் அறுநூற்று அறுபத்தோராயிரம் ரூபாவை (ரூபா 757,683,661,000) விஞ்சாத பணத் தொகைகள், (எந்தச் சேவைகள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தினாலும் குறைநிரப்பு மதிப்பீடுகளினாலும் செலவினத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்தச் சேவைகளாக உள்ளவையும்) இத்தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்டுள்ள முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவையுமான சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற் பாலனவாதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பணத்தொகைகள், அத்தகைய அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது செலவிடப்படலாமென்றும்;

(ஆ) எழுநூற்றிப் பதினொரு பில்லியன் எண்ணூற்றி எழுபத்தி நான்கு மில்லியன் மூந்நூற்று எண்பத்திரெண்டு ஆயிரம் ரூபாவை (ரூபா 711,874,382,000) விஞ்சாத பணத் தொகைகள், (திரட்டு நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்பட வேண்டுமெனச் சட்டங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட தேவைகளுக்காக ஏற்பாடுசெய்தல் தொடர்பிலான செலவினத்துக்காக) இத்தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற் பாலனவாதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பணத்தொகைகள் அத்தகைய அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது செலவிடப்படலாமென்றும்;

(இ) கூட்டு மொத்தத்தில் ஐந்து பில்லியன் ரூபாவை (ரூபா 5,000,000,000) விஞ்சாத பணத் தொகைகள், இத்தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்டுள்ள மூன்றாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து முற்பணங்கள் என்ற வகையாகச் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது அத்தகைய எவையேனும் சேவைகள் தொடர்பில் உறப்பட்ட பற்றுக்கள், அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான அதிகபட்ச எல்லைகளை விஞ்சுதலாகாதென்றும்;

(ஈ) எழுநூற்றி இருபத்தொரு பில்லியன் ரூபாவை (ரூபா 721,000,000,000) விஞ்சாத பணத்தொகைகள், அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும், இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி இயைபான சட்டங்களின் நியதிகளின்படி திரட்டப்படவேண்டிய கடன்களாகவுள்ள வரும்படிகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவை தொடர்பில் இத்தீர்மானத்திற்கான சபாபீடத்திலிடப் பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான செலவினத்துக்குரிய ஏற்பாடும் அத்தகைய கடன்களின் விபரங்களும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தில் இடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கையில் உள்ளடக்கப்படுதலும் வேண்டுமென்றும்

அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி இப் பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

முதலாம் அட்டவணை

பொதுச் சேவைகளுக்கான செலுத்த வேண்டிய தொகை

தலைப்பு	இல.		மீண்டுவரும் செலவினம் ரூபா	மூலதன செலவினம் ரூபா
		தலைப்பு 1 - 25 விசேட செலவினக் கூறுகள்		
		மீண்டுவரும் **4,863,094,000**		
		மூலதன **1,666,300,000**		
அமைவு வருமாறு :-				
தலைப்பு	1	அதிமேதகு சனாதிபதி		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	992,005,000	463,770,000
		நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்	-	950,000,000
தலைப்பு	2	பிரதம அமைச்சர் அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	280,065,000	6,560,000
தலைப்பு	4	உயர் நீதிமன்ற நீதிபதிகள்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	65,260,000	10,890,000
தலைப்பு	5	அமைச்சரவை அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	39,920,000	6,000,000
தலைப்பு	6	அரசாங்க சேவைகள் ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	82,397,000	5,100,000
தலைப்பு	7	நீதிச் சேவை ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	30,520,000	1,000,000
தலைப்பு	8	தேசிய பொலிஸ் ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	46,210,000	1,240,000
தலைப்பு	9	நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	10,145,000	110,000
தலைப்பு	10	இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	164,900,000	38,100,000
தலைப்பு	11	நிதி ஆணைக்குழு அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	28,655,000	5,250,000
தலைப்பு	12	தேசிய கல்வி ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	16,532,000	2,350,000
தலைப்பு	13	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	82,530,000	6,950,000
தலைப்பு	16	பாராளுமன்றம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	967,340,000	63,174,000
தலைப்பு	17	பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	16,600,000	605,000
தலைப்பு	18	பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	29,070,000	1,100,000
தலைப்பு	19	பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	52,020,000	7,100,000

			மீண்டுவரும் செலவினம் ரூபா	மூலதன செலவினம் ரூபா
தலைப்பு	20	தேர்தல்கள் ஆணைக்குழு		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	1,255,480,000	58,361,000
தலைப்பு	21	தேசிய கணக்காய்வு அலுவலகம்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	643,370,000	29,530,000
தலைப்பு	22	நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	9,470,000	170,000
தலைப்பு	23	கணக்காய்வு சேவை ஆணைக்குழு		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	16,460,000	1,040,000
தலைப்பு	24	தேசிய கொள்வனவு ஆணைக்குழு		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	28,935,000	7,760,000
தலைப்பு	25	எல்லை நிர்ணய ஆணைக்குழு		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	5,210,000	140,000
	டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு			
	மீண்டுவரும்	**218,518,000**		
	மூலதன	**881,194,000**		

அமைவு வருமாறு :-

தலைப்பு	51	டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	71,357,000	4,134,000
	நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்	147,161,000	877,060,000
	விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு			
	மீண்டுவரும்	**531,958,000**		
	மூலதன	**804,630,000**		

அமைவு வருமாறு :-

தலைப்பு	52	விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	57,877,000	5,410,000
	நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்	459,131,000	799,220,000
தலைப்பு	299	இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	14,950,000	-
	பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு			
	மீண்டுவரும்	**702,193,000**		
	மூலதன	**386,800,000**		

அமைவு வருமாறு :-

தலைப்பு	53	பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	327,936,000	291,895,000
தலைப்பு	252	தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	339,720,000	63,830,000
தலைப்பு	300	உணவு ஆணையாளர் திணைக்களம்		
	நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்	34,537,000	31,075,000
	தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு			
	மீண்டுவரும்	**985,902,000**		
	மூலதன	**890,100,000**		

			மீண்டுவரும் செலவினம் ரூபா	மூலதன செலவினம் ரூபா
அமைவு வருமாறு :-				
தலைப்பு 54	தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		35,930,000	3,290,000
நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்		50,650,000	1,380,000
தலைப்பு 221	தொழில் திணைக்களம்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		405,550,000	609,400,000
நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்		360,472,000	266,500,000
தலைப்பு 328	மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		133,300,000	9,530,000
வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு				
மீண்டுவரும்		**262,980,000**		
மூலதன		**187,700,000**		
அமைவு வருமாறு :-				
தலைப்பு 55	வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சர்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		60,380,000	65,010,000
நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்		120,000,000	103,200,000
தலைப்பு 210	தகவல் திணைக்களம்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		82,600,000	19,490,000
விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு				
மீண்டுவரும்		**27,850,000**		
மூலதன		**7,900,000**		
அமைவு வருமாறு :-				
தலைப்பு 56	விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		27,850,000	7,900,000
புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு				
மீண்டுவரும்		**538,000,000**		
மூலதன		**350,400,000**		
அமைவு வருமாறு :-				
தலைப்பு 101	புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		50,700,000	3,700,000
நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்		41,100,000	319,200,000
தலைப்பு 201	பௌத்த அலுவல்கள் திணைக்களம்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		25,000,000	4,900,000
நிகழ்ச்சித்திட்டம் 02	அபிவிருத்திச் செயற்பாடுகள்		421,200,000	22,600,000
நிதி அமைச்சு				
மீண்டுவரும்		**29,647,974,000**		
மூலதன		**30,990,300,000**		
அமைவு வருமாறு :-				
தலைப்பு 102	நிதி அமைச்சர்			
நிகழ்ச்சித்திட்டம் 01	செயல்முறைச் செயற்பாடுகள்		732,307,000	49,685,000

			மீண்டுவரும் செலவினம் ரூபா	மூலதன செலவினம் ரூபா
		நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்	-	808,900,000
தலைப்பு	238	அரசிறைக் கொள்கைத் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	27,248,000	100,000
தலைப்பு	239	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	177,280,000	6,050,000
தலைப்பு	240	தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	10,123,120,000	851,200,000
தலைப்பு	241	அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	24,010,000	25,033,375,000
தலைப்பு	242	முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	28,210,000	550,000
தலைப்பு	243	அபிவிருத்தி நிதித் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	2,173,785,000	200,000
		நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்	-	1,830,815,000
தலைப்பு	244	வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	20,915,000	210,000
தலைப்பு	245	அரச நிதித் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	21,315,000	81,900,000
தலைப்பு	246	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	1,272,690,000	164,300,000
தலைப்பு	247	இலங்கை சுங்கம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	1,025,625,000	127,800,000
தலைப்பு	248	மது வரித் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	349,950,000	92,300,000
தலைப்பு	249	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்		
		நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள்	13,402,905,000	1,903,070,000
